Q.C.092

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Survey Department Test – Senior Draughtsman Test – Paper - I (Without Books) | 014 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left**. At the beginning of exam, timer will show

1. 1,00,000 square links is equal to
1,00,000 சதுர லிங்க்ஸ் __________ க்கு சமம்.

(A) 1 acre
1 ஏக்கர்

(B) 1 Hectare
1 ஹெக்டேர்

(C) 1 square yard
1 சதுர யார்டு

(D) 1 square kilometer
1 சதுர கி.மீ.

2. When a quadrilateral figure with its two sides parallel and two of its angle right angles is called
இரு பக்கங்கள் இணையானவையாகவும், இரு கோணங்கள் செங்கோணங்களாகவும் கொண்ட ஒரு நாற்கர உருவம் __________ என்றழைக்கப்படும்.

(A) Trapezoid
டிரப்பீசியம்

(B) Triangle
முக்கோணம்

(C) Cylinder
உருளை

(D) Rectangle
செவ்வகம்

3. In a right angled triangle, the measure of hypotenuse is ______________ than either of the two sides containing the right angle.
ஒரு செங்கோண முக்கோணத்தில் அதன் கர்ணத்தின் அளவு அதன் செங்கோணத்தை உடைய இருபக்கங்களை விட __________ ஆக இருக்கும்.

(A) Short
குறைவாக

(B) Longer
நீளமானதாக

(C) Equal to both sides
சமமாக

(D) Equal difference in two sides measurement
இரு பக்க அளவுகளிலிருந்து ஒரே அளவில் வித்தியாசப்பட்டிருக்கும்

4. Each chain is provided with ____________ No. of arrows.
ஒவ்வொரு சங்கிலியும் ________ எண்ணிக்கையிலான ஊசிகளுடன் வழங்கப்பட்டிருக்கும்.

(A) Three
மூன்று

(B) Twenty
இருபது

(C) Five
ஐந்து

(D) Ten
பத்து

5. When the measuring a line with metric chain, the follower returned the arrows thrice and has 9 arrows in his hand and the distance between the last arrows and the closing station is 58 links. Find the entries length of the line.
மெட்ரிக் சங்கிலிக் கொண்டு ஒரு கோட்டினை அளவு செய்யும் போது, பின்தொடர்பவர் மூன்று முறை ஊசிகளை முழுவதுமாக திருப்பி கொடுத்து பின்னர் இறுதியாக முடிவு நிலையத்தை அடையும் பொழுது அவரிடம் 9 ஊசிகளும், கடைசி ஊசிக்கும் முடிவு நிலையத்திற்கும் இடையில் 58 லிங்க்ஸ் தூரம் உள்ளது எனில் அந்த கோட்டின் மொத்த தூரம் காண்க.

(A) 5747 links or 1149.4 meter
5747 லிங்க்ஸ் (அ) 1149.4 மீ.

(B) 6361 links or 1272.2 meter
6361 லிங்க்ஸ் (அ) 1272.2 மீ.

(C) 3958 links or 791.6 meter
3958 லிங்க்ஸ் (அ) 791.6 மீ.

(D) 3572 link or 714.4 meter
3572 லிங்க்ஸ் (அ) 714.4 மீ.

6. The distance measured between two stations, is 25496 links. How many times were the arrows exchanged?
இரு நிலையங்களுக்கு இடையே சங்கிலியால் அளவிடப்பட்ட தூரம் 25496 லிங்க்ஸ் எனில் ஊசிகள் எத்தனை முறை கைமாறியிருக்கும்?

(A) 20 times
20 முறை

(B) 26 times
26 முறை

(C) 25 times
25 முறை

(D) 10 times
10 முறை

7. The method following for measurement, when the ground is uneven is called as
இரு நிலையங்களுக்கிடையே தரை சமதளமற்று மேடு பள்ளங்கள் நிறைந்த இடங்களில் கடைபிடிக்கும் முறை ________ எனப்படும்.

(A) Stepping method
படிகட்டு முறை

(B) Hill method
மலை முறை

(C) Traverse method
டிராவர்ஸ் முறை

(D) Ray method
ரே முறை

8. What is the restriction of length of offsets?
குத்தளவு எடுக்க தூர கட்டுப்பாடு எவ்வளவு?

(A) 50 meter
50 மீட்டர்

(B) 500 meter
500 மீட்டர்

(C) 200 meter
200 மீட்டர்

(D) 100 meter
100 மீட்டர்

9. Why the restriction of length in offsets should be followed?
குத்தளவு எடுக்க தூர கட்டுப்பாடு ஏன் பின்பற்றப்பட வேண்டும்?

(A) for clear vision
தெளிவான பார்வைக்காக

(B) for accuracy
துல்லியமான அளவு செய்ய

(C) for reduce measurement timing
அளவிடும் நேரத்தை குறைக்க

(D) for plotting reasons
வரைதல் காரணத்திற்காக

10. The Cadastral survey is also known as
கடாஸ்ட்டிரல் சர்வே என்பது __________ என்றும் அறியப்படும்.

(A) Town Survey
நகர அளவை

(B) Arial Survey
வானியல் அளவை

(C) Topo Survey
விளக்கி அளவை

(D) Revenue Survey
வருவாய் நில அளவை

11. The 1st Class (Theodolite) stones measuring roughly
முதல் வகுப்பு தியோடலைட் கற்கள் அளவு தோராயமாக

(A) 90 cm × 22.5 cm × 22.5 cm
90 செ.மீ. × 22.5 செ.மீ. × 22.5 செ.மீ.

(B) 60 cm × 15 cm × 15 cm
60 செ.மீ. × 15 செ.மீ. × 15 செ.மீ.

(C) 90 cm × 15 cm × 15 cm
90 செ.மீ. × 15 செ.மீ. × 15 செ.மீ.

(D) 30 cm × 15 cm × 15 cm
30 செ.மீ. × 15 செ.மீ. × 15 செ.மீ.

12. The broad arrow cut on all stones should be atleast ____________ long and ____________ deep.
நில அளவை கற்களில் பதிக்கப்படும் அம்புகுறி குறைந்தபட்சம் _________ அளவுள்ளதாக இருக்க வேண்டும்.

(A) 6 cm long and ½ cm deep
6 செ.மீ. நீளம் மற்றும் ½ செ.மீ. ஆழம்

(B) 10 cm long and ½ cm deep
10 செ.மீ. நீளம் மற்றும் ½ செ.மீ. ஆழம்

(C) 15 cm long and ½ cm deep
15 செ.மீ. நீளம் மற்றும் ½ செ.மீ. ஆழம்

(D) 20 cm long and ½ cm deep
20 செ.மீ. நீளம் மற்றும் ½ செ.மீ. ஆழம்

13. Formation of No. of Triangles in simple-triangle system is based on its ____________ in the field.
சாதாரண முக்கோண முறையில் புலங்களில் அமைக்கப்படும் முக்கோணங்களில் எண்ணிக்கை அதன் _________ ஐ பொறுத்து அமையும்.

(A) No. of sides
பக்கங்களின் எண்ணிக்கை

(B) No. of subdivisions
உட்பிரிவுகளின் எண்ணிக்கை

(C) No. of field junctions
புலசந்திப்புகளின் எண்ணிக்கை

(D) No. of offsets
குத்தளவுகளின் எண்ணிக்கை

14. Formation of No. of Triangles in Diagonal and Offset system is based on its ____________ in the field.
மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறையில் புலங்களில் அமைக்கப்படும் முக்கோணங்களில் எண்ணிக்கை அதன் _________ ஐ பொறுத்து அமையும்.

(A) No. of sides
பக்கங்களின் எண்ணிக்கை

(B) No. of subdivisions
உட்பிரிவுகளின் எண்ணிக்கை

(C) No. of field junctions
புலசந்திப்புகளின் எண்ணிக்கை

(D) No. of offsets
குத்தளவுகளின் எண்ணிக்கை

15. The measurement of obstructed lines may be divided in to ____________ classes.
தடைபட்ட கோடு அளவிடு முறை _________ வகைகளை கொண்டதாக பிரிக்கலாம்.

(A) Four
நான்கு

(B) Five
ஐந்து

(C) Six
ஆறு

(D) Seven
ஏழு

16. The scale of map for the field having 8 hectare is to be plotted in
8 ஹெக்டேர் பரப்புடைய புலத்தின் வரைபடம் வரைவு செய்ய அளவு விகிதம்

(A) 1 mm : 5000 mm
1 மிமீ : 5000 மிமீ

(B) 1 mm : 2000 mm
1 மிமீ : 2000 மிமீ

(C) 1 mm : 500 mm
1 மிமீ : 500 மிமீ

(D) 1 mm : 1000 mm
1 மிமீ : 1000 மிமீ

17. The main process in the survey of a villages are classified into ______ process.
ஒரு கிராமம் நில அளவை செய்வதில் முக்கிய பணிகளின் வகை ______ என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(A) A to H process
ஏ முதல் எச் வரையிலான பணி

(B) A to Z process
ஏ முதல் இசட் வரையிலான பணி

(C) F to P process
எப் முதல் பி வரையிலான பணி

(D) A to C process
ஏ முதல் சி வரையிலான பணி

18. What is the previous Survey Act followed in Survey Department before the Act VIII of 1923?
நில அளவை சட்டம் VIII/1923முன்பாக நில அளவைத் துறையில் கடைபிடிக்கப்பட்ட சட்டம் யாது?

(A) Act XXVI of 1907
சட்டம் XXVI/1907

(B) Act IV of 1897
சட்டம் IV/1897

(C) Act VIII of 1901
சட்டம் VIII/1901

(D) Act VIII of 1897
சட்டம் VIII/1897

19. The register dealing with transfer from one head of classification to another shall be maintained in ______ register.
நிலத்தின் வகைப்பாடு மாற்றம் செய்யப்படும் நேர்வுகளில் பதிவு செய்ய வேண்டிய பதிவேடு

(A) No. 6 Register
எண். 6 பதிவேடு

(B) No. 7 Register
எண். 7 பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

20. The application received for grant of land shall be registered in the accounts in ____________ Register.
நில ஒப்படை வழங்கக் கோரி வரப்பெற்ற மனுக்களை ________ பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) No. 6 Register
எண். 6 பதிவேடு

(B) No. 7 Register
எண். 7 பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

21. Relinquishment of the land by the Registered holder, shall be registered in ____________ Register.
பதிவுபெற்ற கைப்பற்றுதாரர்கள் தங்களது உரிமையை கைவிடும் நிகழ்வுகளில் அதனை ________ பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) No. 6 Register
எண். 6 பதிவேடு

(B) No. 7 Register
எண். 7 பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

22. The application received for Transfer of Registry directly from the land owner shall be registered in the account in ____________ Register.
பதிவு மாறுதல் செய்திடக் கோரி நில உரிமையாளர்களிடமிருந்து நேரடியாக வரப்பெற்ற மனுக்களை ________ பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) No. 6(2) Register
எண். 6(2) பதிவேடு

(B) No. 6(1) Register
எண். 6(1) பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

23. The application received for Transfer of Registry through the Sub-Registrar's Officer shall be registered in the accounts in ____________ Register.
பதிவு மாறுதல் செய்திடக் கோரி சார் பதிவாளர் அலுவலகங்கள் மூலம் வரப்பெற்ற மனுக்களை ________ பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) No. 6(2) Register
எண். 6(2) பதிவேடு

(B) No. 6(1) Register
எண். 6(1) பதிவேடு

(C) No. 4 Register
எண். 4 பதிவேடு

(D) No. 5 Register
எண். 5 பதிவேடு

24. Now in Online patta Transfer System, the application for transfer registry shall be submitted through ______________ in online method.
இணையவழி பட்டா மாறுதல் முறையில் மனுக்கள் __________ மூலமாக இணையவழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(A) Common Service Centres
பொது சேவை மையங்கள்

(B) Village Administrative Officer
கிராம நிர்வாக அலுவலர்

(C) By manual to Taluk Office
கைப்பிரதியாக வட்ட அலுவலகத்தில்

(D) By manual to the Surveyor
கைப்பிரதியாக நில அளவரிடத்தில்

25. After applications received to the Surveyor's login for transfer of registry in involving sub division cases, the Firka surveyor shall do in first step in online
நில அளவரின் கணக்கிற்கு இணையவழியில் பெறப்பட்ட உட்பிரிவு செய்ய வேண்டிய மனுக்களின் மீது குறுவட்ட அளவர் எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கையாக __________ செய்ய வேண்டும்.

(A) Fix the date of proposed field visit in online
புலத்தை தணிக்கை செய்ய உள்ள உத்தேச தேதியை இணையவழியில் பதிவு செய்ய வேண்டும்

(B) Prepare the subdivision sketches
உட்பிரிவு வரைபடங்களை தயார் செய்ய வேண்டும்

(C) Transfer the application to the L.R.D.
வட்ட வரைவாளருக்கு மனுவினை மாறுதல் செய்ய வேண்டும்

(D) Transfer the application to the V.A.O.
கிராம நிர்வாக அலுவலருக்கு மனுவினை மாறுதல் செய்ய வேண்டும்

26. The formula for N.O.S. problem is
என்.ஓ.எஸ். கணக்கீட்டு முறை சூத்திரம் யாது?

(A) $\dfrac{AC^2 + AB^2 - BC^2}{2 \times AC}$

(B) $\dfrac{AC^2 + AB^2 + BC^2}{3 \times AC}$

(C) $\dfrac{AC^2 + AB^2 + BC^2}{AC}$

(D) $\dfrac{AC^2 + AB^2 + BC^2}{2 \times AC}$

27. The name of statement form prescribed in Appendix VII to the Par 13(a) of Chapter I of chain Survey and Land Records Manual Part. II is called as
சங்கிலி அளவை மற்றும் நிலப் பதிவுருக்கள் விதி தொகுப்பு பாகம். II அத்தியாயம்.I பத்தி 13(a) ன்படி இணைப்பு VII இல் உள்ள படிவம் _________ எனப்படும்.

(A) Progress Statement
பணி முன்னேற்ற அறிக்கை

(B) Expenditure Statement
செலவின அறிக்கை

(C) Demand Notice
கேட்பு பட்டியல்

(D) Sub Division Statement
உட்பிரிவு ஸ்டேட்மென்ட் அறிக்கை

28. The _____________ Register is a current Register of all changes involving new survey field and sub division sanctioned in register 4, 5, 6 or 7.
பதிவேடுகள் 4, 5, 6 அல்லது 7 ஆகியவற்றில் அங்கீகரிக்கப்படும் அனைத்து புதிய புலங்கள் அல்லது உட்பிரிவு மாறுதல் அனைத்தையும் கொண்ட நடப்பு பதிவேடு ___________ ஆகும்.

(A) No. 8(A) Register
எண். 8(A) பதிவேடு

(B) No. 10(1) Register
எண். 10(1) பதிவேடு

(C) No. 3 Register
எண். 3 பதிவேடு

(D) No. 14 Register
எண். 14 பதிவேடு

29. When the actual area of the entire field differs from the registered area by more than 5 percent should be treated as error in area and _____________ area shall be adopted.
முழு புலத்தின் பரப்பளவும் 5 சதவீத வரம்பிற்கு மேற்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள பரப்பளவிற்கும் உண்மையான பரப்பளவிற்கும் வித்தியாசம் இருக்குமாயின் __________ பரப்பளவினை அனுசரிக்கப்பட வேண்டும்.

(A) Registered Area
பதிவு செய்யப்பட்ட பரப்பளவு

(B) Adjusted Area
சரிகட்டிய பரப்பளவு

(C) Actual area
உண்மையான பரப்பளவு

(D) Difference in area
வித்தியாசப்படும் பரப்பளவு

30. How to give subdivision notations of subdivisions in 4 new subdivisions created in existing subdivision No. 14/1?
ஏற்கனவே உள்ள 14/1 என்ற உட்பிரிவு மீண்டும் 4 உட்பிரிவாக மாறும் எனில் எப்படி உட்பிரிவு எண் கொடுக்க வேண்டிடும்?

(A) 14/1A, 14/1B, 14/1C, 14/1D

(B) 14/1-1, 14/1-2, 14/1-3, 14/1-4

(C) 14/1(i), 14/1(ii), 14/1(iii), 14/1(iv)

(D) 14-1/1, 14-2/1, 14-3/1, 14-4/1

31. The New Subdivision created in a Poramboke land of survey field having already subdivisions the notation shall be given as following manner
ஏற்கனவே உட்பிரிவுகளைக் கொண்ட ஒரு புறம்போக்கு புலத்தில் புதிய உட்பிரிவுகள் மேற்கொள்ளும்போது உட்பிரிவு எண்கள் பின்வருமாறு கொடுக்கப்பட வேண்டும்?

(A) with single letter as A, B, C etc in exiting subdivision number
ஏற்கனவே உள்ள உட்பிரிவு எண்ணுடன் A, B, C என்ற வரிசையின் ஒற்றை இலக்க எழுத்துக்களுடன் இணைத்து

(B) with double letter as AA, AB, AC etc in existing subdivisional number
ஏற்கனவே உள்ள உட்பிரிவு எண்ணுடன் AA, AB, AC என்ற வரிசயையில் இரட்டை இலக்க எழுத்துக்களுடன் இணைத்து

(C) with Roman letter (i), (ii), (iii) in existing subdivision
ஏற்கனவே உள்ள உட்பிரிவு எண்ணுடன் (i), (ii), (iii) என்ற ரோமன் எண் வரிசையின் இணைத்து

(D) will assigned numbers serially in continuation of the last registered subdivisional number
ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கடைசி உட்பிரிவு எண்ணைக் தொடர்ந்து வரிசையாக எண்ணிடப்பட வேண்டும்

32. The fasli year based annual account showing the changes in the registry is ______________ Village Account.
பசலி ஆண்டு அடிப்படையில் புலத்தின் பதிவுகளில் ஏற்படும் மாறுதல்களை காண்பிக்கும் கிராம கணக்கு __________ ஆகும்.

(A) Village Account No. 3
கிராம கணக்கு எண். 3

(B) Village Account No. 1
கிராம கணக்கு எண். 1

(C) Village Account No. 5
கிராம கணக்கு எண். 5

(D) Village Account No. 7
கிராம கணக்கு எண். 7

33. The Village Account No. 7 is showing the details of
கிராம கணக்கு எண். 7 என்பது __________ விவரங்களை கொண்டிருக்கும்.

(A) Patta No. wise demand details
பட்டா எண் வாரியாக கேட்பு பட்டியல் விவரம்

(B) Individual wise encroachment extent and penalty amount
தனிநபர் வாரியாக ஆக்கிரமிப்பு பரப்பு மற்றும் அபராத தொகை

(C) Land Revenue details
நிலவரி விவரம்

(D) Cultivation details
சாகுபடி விவரம்

34. The Village Account No. 10(1) is called as ______________ Register.
கிராம கணக்கு எண். 10(1) என்ற பதிவேடு __________ என்றழைக்கப்படும்.

(A) Adangal
அடங்கல்

(B) Rain Account
மழை கணக்கு

(C) Chitta
சிட்டா

(D) Census Register
கணக்கெடுப்பு பதிவேடு

35. The Adangal Register is the Village Account in Form No.
அடங்கல் பதிவேடு என்பது கிராம கணக்கு எண் __________ கொண்ட படிவமாகும்.

(A) Village Account No. 1
கிராம கணக்கு எண். 1

(B) Village Account No. 13
கிராம கணக்கு எண். 13

(C) Village Account No. 2
கிராம கணக்கு எண். 2

(D) Village Account No. 14C
கிராம கணக்கு எண். 14C

36. Simplification in maintenance of Village Account have been ordered in ______________ Government Order.
கிராம கணக்கு பராமரிப்பு முறையை எளிமையாக்கி உத்தரவிடப்பட்ட அரசாணை எண் __________ ஆகும்.

(A) G.O. Ms. No. 548 Revenue [R.A1(1)] Department Dated 20.10.2010
அரசாணை (நிலை) எண். 548 வருவாய் [வ.நி.1(1)] துறை நாள் 20.10.2010

(B) G.O. Ms. No. 210 Revenue [S.S1(1)] Department Dated 08.07.2011
அரசாணை (நிலை) எண். 210 வருவாய் [நி.அ1(1)] துறை நாள் 08.07.2011

(C) G.O. Ms. No. 540 Revenue [R.A1(1)] Department Dated 20.10.2005
அரசாணை (நிலை) எண். 540 வருவாய் [வ.நி.1(1)] துறை நாள் 20.10.2005

(D) G.O. Ms. No. 303 Fin(pay cell) Department Dated 12.10.2017
அரசாணை (நிலை) எண். 303 நிதி (ஊதிய குழு) துறை நாள் 12.10.2017

37. What is the Sub process No. for plotting for old traverse boundary in modern Survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV ல் உள்ளவாறு நவீன நில அளவையியல் பழைய டிராவர்ஸ் எல்லைகளை வரையும் துணை அலுவலல் எண் யாது?

(A) SP.5
துணை அலுவல் எண். 5

(B) SP 10
துணை அலுவல் எண். 10

(C) SP 18
துணை அலுவல் எண். 18

(D) SP 15
துணை அலுவல் எண். 15

38. What is the Sub process No. for spherical coordinate in to rectangular coordinates in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV ல் உள்ளவாறு நவீன நில அளவையில் ஸ்பெரிக்கல் கோ-ஆர்டினேட்டை செங்கோண கோ-ஆர்டினேட்ஸாக மாற்றும் பணியின் துணை அலுவல் எண் யாது?

(A) SP.5
துணை அலுவல் எண். 5

(B) SP 10
துணை அலுவல் எண். 10

(C) SP 8
துணை அலுவல் எண். 8

(D) SP 15
துணை அலுவல் எண். 15

39. What is the Sub process No. for downloading, processing and storing of traverse in modern Survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV ல் உள்ளவாறு நவீன நில அளவையில் டிராவர்ஸ் தரவிறக்கம் செய்தல். அதனை சேமித்தல் பணியின் துணை அலுவலல் எண் யாது?

(A) SP.5
துணை அலுவல் எண். 5

(B) SP 10
துணை அலுவல் எண். 10

(C) SP 8
துணை அலுவல் எண். 8

(D) SP 11
துணை அலுவல் எண். 11

40. What is the Sub process No. for generation of F.M.B./Block Map in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV இல் உள்ளவாறு நவீன நில அளவையில் புலப்படம்/பிளாக் வரைபடம் உருவாக்குதல் பணியின் துணை அலுவல் எண் யாது?

(A) SP 17
துணை அலுவல் எண். 17

(B) SP 10
துணை அலுவல் எண். 10

(C) SP 8
துணை அலுவல் எண். 8

(D) SP 11
துணை அலுவல் எண். 11

41. What is the sub process No. for generation of Village Map in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV இல் உள்ளவாறு கிராம வரைபடம் உருவாக்குதல் பணியின் துணை அலுவல் எண் யாது?

(A) SP 17
துணை அலுவல் எண். 17

(B) SP 10
துணை அலுவல் எண். 10

(C) SP 18
துணை அலுவல் எண். 18

(D) SP 11
துணை அலுவல் எண். 11

42. What is the Sub process No. for preparation of Fair Area Register adjustment of area in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV ல் உள்ளவாறு நவீன நில அளவையில் தூய பரப்பளவு பதிவேடு தயாரித்தல் மற்றும் பரப்பளவு சரிகட்டுதல் பணியின் துணை அலுவல் எண் யாது?

(A) SP 17
துணை அலுவல் எண். 17

(B) SP 19
துணை அலுவல் எண். 19

(C) SP 18
துணை அலுவல் எண். 18

(D) SP 11
துணை அலுவல் எண். 11

43. What is the Sub Process No. for preparation of Fair Accounts using Tamil Nilam Software in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV இல் உள்ளவாறு நவீன நில அளவையில் தமிழ்நிலம் மென்பொருள் பயன்படுத்தி தூய ஆவணங்கள் தயாரித்தல் பணியின் துணை அலுவலர் எண் யாது?

(A) SP 17
துணை அலுவல் எண். 17

(B) SP 19
துணை அலுவல் எண். 19

(C) SP 18
துணை அலுவல் எண். 18

(D) SP 24
துணை அலுவல் எண். 24

44. What is the Sub process No. for preparation of FMS using Collab Land Software or other drawing software in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV இல் உள்ளவாறு நவீன நில அளவையில் கொலப்லேண்ட் மென்பொருள் அல்லது வேறு படம் வரையும் மென்பொருள் மூலம் புலப்படம் தயாரித்தல் பணியின் துணை அலுவலர் எண் யாது?

(A) SP 25
துணை அலுவல் எண். 25

(B) SP 19
துணை அலுவல் எண். 19

(C) SP 18
துணை அலுவல் எண். 18

(D) SP 11
துணை அலுவல் எண். 11

45. What is the Sub process No. for preparation of preparation of 9(2) Notice with sketches in modern survey as per revised rules in Survey Manual Vol. IV?
திருத்திய விதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV இல் உள்ளவாறு நவீன நில அளவையில் 9(2) அறிக்கை வரைபடத்துடன் தயாரித்தல் பணியின் துணை அலுவலல் எண் யாது?

(A) SP 17
துணை அலுவல் எண். 17

(B) SP 22
துணை அலுவல் எண். 22

(C) SP 18
துணை அலுவல் எண். 18

(D) SP 11
துணை அலுவல் எண். 11

46. In respect of location and demarcation work, in modern survey, what is the percentage of inspection by the Deputy Inspector of Survey shall be made?
நவீன நில அளவையில், இடம் காணும் பணி மற்றும் இடம் குறிப்பு பணியில் துணை ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டிய தணிக்கை சதவீதம் என்ன?

(A) 75%
(B) 25%
(C) 50%
(D) 30%

47. In respect of location and demarcation work, in modern survey, what is the percentage of inspection by the Inspector of Survey shall be made?
நவீன நில அளவையில், இடம் காணும் பணி மற்றும் இடம் குறிப்பு பணியில் ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டிய தணிக்கை சதவீதம் என்ன?

(A) 75%
(B) 25%
(C) 50%
(D) 30%

48. In respect of location and demarcation work, in modern survey, what is the percentage of inspection by the Assistant Director of Survey shall be made?
நவீன நில அளவையில், இடம் காணும் பணி மற்றும் இடம் குறிப்பு பணியில் உதவி இயக்குநர் மேற்கொள்ள வேண்டிய தணிக்கை சதவீதம் என்ன?

(A) 5%
5%

(B) 15%
15%

(C) 10%
10%

(D) Random Check
அங்கொன்றும் இங்கொன்றுமாக

49. The case study performed in Rural Area by using G.P.S and E.T.S in ____________ Village of Tamilnadu.
ஜி.பி.எஸ். மற்றும் எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன் கருவி கொண்டு தமிழ்நாட்டில் ஊரக பகுதியில் மாதிரி நில அளவை செய்யப்பட்ட கிராமம்

(A) Mamallapuram
மாமல்லபுரம்

(B) Manamai
மனமை

(C) Ayanavaram
அயனாவரம்

(D) Alandur
ஆலந்தூர்

50. Universal Transverse Mercator projection system in now being used in India after the
யுனிவரஸ் டிரான்ஸ்வர்ஸ் மெர்கேட்டர் புரஜெக்ஷன் முறை இந்தியாவில் __________ பிறகு தற்பொழுது பயன்படுத்தப்படுகிறது.

(A) New National Map Policy 2005
புதிய தேசிய வரைபட கொள்கை 2005

(B) 20 points programme
இருபது அம்ச திட்டம்

(C) Five year plan
ஐந்தாண்டு திட்டம்

(D) New Educational Policy
புதிய கல்வி கொள்கை

51. During the course of maintenance of Survey, in what occasions, the Notice under Section 6(1) notice is published?
பராமரிப்பு பணியின் பொது எந்த சமயங்களில் பிரிவு 6(1) அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

(A) measuring new subdivisions in the exiting private patta land
ஏற்கனவே உள்ள தனியார் பட்டா நிலங்களில் உட்பிரிவு செய்யப்படும் பொழுது

(B) during the collection of Land Revenue
நிலவரி வசூல் செய்யும் பொழுது

(C) During the collection C.S.M(A) charges
சி.எஸ்.எம்.(ஏ) கட்டணங்கள் வசூல் செய்யும் பொழுது

(D) During the measurement / formation of new survey fields / subdivisions in poramboke lands or during land acquisition or land alienation or land transfer
புதிய புலங்கள் உருவாக்கப்படும் பொழுது/புறம்போக்கு நிலங்களில் உட்பிரிவு செய்யும் பொழுது/ நில எடுப்பு / நில மாற்றம் செய்யும் பணிகளின் போது

52. During the course of maintenance of Survey, who is publish the Notice under section 6(1)?
பராமரிப்பு பணியின் போது பிரிவு 6(1) அறிவிப்பு வெளியிடுபவர் யார்?

(A) Field Surveyor/Firka Surveyor/Sub Inspector of Survey
நில அளவர்/குறுவட்ட அளவர்/சார் ஆய்வாளர்

(B) Tahsildar
வட்டாட்சியர்

(C) Deputy Inspector of Survey
துணை ஆய்வாளர்

(D) Assistant Director
உதவி இயக்குநர்

53. What purpose, the notice under section 8(1) is issued?
பிரிவு 8(1) அறிவிப்பு என்ன காரணத்திற்காக வழங்கப்படுகிறது?

(A) Collection of Survey expenditure
நில அளவை செலவினம் வசூலிப்பதற்காக

(B) Collection of Land Revenue
நிலவரி வசூலிப்பதற்காக

(C) Collection of Stamp duty
முத்திரை தீர்வை வசூலிப்பதற்காக

(D) Collection of Subdivision fees
உட்பிரிவு கட்டணம் வசூலிப்பதற்காக

54. In which section of S & B Act, the survey officials are empowered to enter upon the boundary or premises and clear the obstructions for the demarcation and measurement work?
நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் நில அளவை, அலுவலர்களுக்கு இடக்குறியீடு செய்யவும், அளவுப் பணி செய்யவும் ஒரு எல்லையில்/ கட்டிடத்தில் நுழையவும் அதில் தடைகளை அகற்றிடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது?

(A) Under section 6(1)
பிரிவு 6(1) -ன் கீழ்

(B) Under section 15(1)
பிரிவு 15(1) -ன் கீழ்

(C) Under section 9(1)
பிரிவு 9(1) -ன் கீழ்

(D) Under section 22
பிரிவு 22 -ன் கீழ்

55. Who is take decision under section 9(1) of S and B Act?
நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டம் பிரிவு 9(1)-ன் கீழ் முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளவர் யார்?

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) Inspector
ஆய்வாளர்

(C) Deputy Inspector
துணை ஆய்வாளர்

(D) Tahsildar
வட்டாட்சியர்

56. What purpose, the notice under section 15(2) is issued?
பிரிவு 15(2) அறிவிப்பு என்ன காரணத்திற்காக வழங்கப்படுகிறது?

(A) for alteration of area
பரப்பளவு மாற்றம் செய்ய

(B) for transfer of Registry
பதிவு மாறுதல் செய்ய

(C) For Renewal and repair of survey marks
நில அளவைக் குறி பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும்

(D) Collection of subdivision fees
உட்பிரிவு கட்டணம் வசூலிப்பதற்காக

57. Completion of Survey work has been notified under Section ____________ of S and B Act.
நில அளவைப் பணி முடிவுற்றது குறித்த அறிவிப்பு நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்ட பிரிவு _________ ன் படி வெளியிடப்படுகிறது.

(A) Section 5
பிரிவு 5

(B) Section 13
பிரிவு 13

(C) Section 17
பிரிவு 17

(D) Section 9(2)
பிரிவு 9(2)

58. Survey Advance Account No. 7 is consists the details of
நில அளவை முன்பணக் கணக்கு எண் 7 என்பது _________ விவரங்களை கொண்டுள்ளது.

(A) Stone Stock
கல் இருப்பு

(B) Bill wise demand collection
பட்டியல் வாரியாக கேட்பு, வசூல் நிலுவை

(C) Budget allotment
பட்ஜெட் நிதி ஒதுக்கீடு

(D) Nominal roll of surveyors
நில அளவர்களின் பெயர் பட்டியல்

59. The Equal mark with plumud hole in the center has been fixed on the top of the I class survey stone planted in _____________ places.
நில அளவைக் கல்லின் தலைப் பகுதியில் நடுவின் பிளமட் குழியுடன் கூடிய சமக் குறி _________ இடங்களில் நடப்படும் முதலில் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Village Bi-junction pointer
இரு கிராம சந்திப்பு பாயின்டர்

(B) Khandam theodolite station
கண்டம் தியோடலைட் நிலையங்கள்

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) River boundary
ஆற்றின் எல்லையில்

60. The Triangle mark with plumud hole in the center has been fixed on the top of the I class survey stone planted in _____________ places.
நில அளவைக் கல்லின் தலைப் பகுதியில் நடுவின் பிளமட் குழியுடன் கூடிய முக்கோண குறி _________ இடங்களில் நடப்படும் முதல் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Village Bi-junction pointer
இரு கிராம சந்திப்பு பாயிண்டர்

(B) Khandam theodolite station
கண்டம் தியோடலைட் நிலையங்கள்

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) River boundary
ஆற்றின் எல்லையில்

61. The Plus mark has been fixed on the top of the II class survey stone planted in _____________ places.
நில அளவைக் கல்லின் தலைப்பகுதியில் நடுவின் கூட்டல் குறி _________ இடங்களில் நடப்படும் இரண்டாம் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Village Bi-junction pointer
இரு கிராம சந்திப்பு பாயிண்டர்

(B) Field junctions in the village boundary line
கிராம எல்லையில் உள்ள புல சந்திப்புகளில்

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) River boundary
ஆற்றின் எல்லையில்

62. The Circle mark with plumud hole in the center has been fixed on the top of the II class survey stone planted in _____________ places.
நில அளவைக் கல்லின் தலைப் பகுதியில் நடுவின் பிளமட் குழியுடன் கூடிய வட்டக் குறி _________ இடங்களில் நடப்படும் இரண்டாம் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Village Bi-junction pointer
இரு கிராம சந்திப்பு பாயிண்டர்

(B) Khandam theodolite station
கண்டம் தியோடலைட் நிலையங்கள்

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) River boundary
ஆற்றின் எல்லையில்

63. The X mark has been fixed on the top of the II class survey stone planted in _____________ places.
நில அளவைக் கல்லின் தலைப் பகுதியில் பெருக்கல் குறி _________ இடங்களில் நடப்படும் இரண்டாம் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Village Bi-junction pointer
இரு கிராம சந்திப்பு பாயிண்டர்

(B) Khandam theodolite station
கண்டம் தியோடலைட் நிலையங்கள்

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) Field junctions in the village boundary
கிராம எல்லையில் வரும் புல சந்திப்புகளில்

64. The English letter S has been fixes on the top of the II class survey stone planted in ______________ places.
நில அளவைக் கல்லின் தலைப் பகுதியில் எஸ் என்ற ஆங்கில எழுத்து குறி __________ இடங்களில் நடத்தப்படும் இரண்டாம் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Village Bi-junction pointer
இரு கிராம சந்திப்பு பாயிண்டர்

(B) Khandam theodolite station
கண்டம் தியோடலைட் நிலையங்கள்

(C) Poramboke bend points
புறம்போக்கு வளைவுகளில்

(D) River boundary
ஆற்றின் எல்லையில்

65. The Arrow mark with plumud hole has been fixed on the top of the II class survey stones at theodolite station in the street/roads and planted under the ground during the ______________ survey.
நில அளவைக் கல்லின் தலைப் பகுதியில் பிளமட் துளையுடன் அம்பு குறியுடன் கூடிய இரண்டாம் வகுப்பு கற்கள் சாலைகள் / தெருக்களில் உள்ள தியோடலைட் நிலையங்களில் பூமிக்கடியில் __________ சமயத்தில் நடத்தப்படுகிறது.

(A) Cadastral Survey
கடாஸ்ட்டிரல் நில அளவை

(B) Hill Survey
மலை நில அளவை

(C) Natham Survey
நத்தம் நில அளவை

(D) Town Survey
நகர அளவை

66. The areas covered by Hill, rocks, of which survey stones have not been able to plant the survey stones in the field junction points, ______________ mark has been fixed.
கற்கள் நடமுடியாத அளவிற்கு உள்ள மலைகள் மற்றும் பாறைகளால் சூழப்பட்ட புல சந்திப்பு இடங்களில் __________ குறி பதிக்கப்படுகிறது.

(A) Triangle mark
முக்கோண குறி

(B) Plus Marks
கூட்டல் குறி

(C) Rock Mark
பாறை குறி

(D) Round Mark
வட்ட குறி

67. The Stone fixed by the Forest Department in the Forest Boundary is called as
வனத்துறையினரால் காட்டின் எல்லைகளில் நடப்படும் தூண்களுக்கு __________ என்று பெயர்.

(A) C.O.R.S. Pillar
சி.ஓ.ஆர்.எஸ். பில்லர்

(B) G.C.P. Point
தரை கட்டுப்பாட்டு புள்ளி

(C) Forest Pillar
காட்டுத் தூண்

(D) Sumaithangi Stones
சுமைத் தாங்கி கற்கள்

68. The poramboke lands such as streets/parks/community center/schools/thopu etc., are called as
தெருக்கள்/பூங்காக்கள்/சமுதாய கூடங்கள்/பள்ளிகள்/தோப்புகள் போன்ற புறம்போக்கு நிலங்கள் __________ என்றழைக்கப்படும்.

(A) Communal purpose Poramboke land
சமூக பயன்பாட்டு புறம்போக்கு நிலங்கள்

(B) Unassesed Waste
தீர்வை ஏற்படாத தரிசு

(C) Anatheenam
அனாதீனம்

(D) Grassing Ground
மேய்க்கால் நிலம்

69. The land of which assessment has been fixed, but the patta has not been granted is called as
தீர்வை விதிக்கப்பட்டதும் ஆனால் பட்டா யாருக்கும் வழங்கப்படாததுமான நிலம் __________ என்றழைக்கப்படும்.

(A) Assessed Waste or Anatheenam
தீர்வை விதிக்கப்பட்ட தரிசு அனாதீனம்

(B) Poramboke
புறம்போக்கு

(C) Unassessed waste
தீர்வை விதிக்கப்படாத தரிசு

(D) Grama Natham
கிராம நத்தம்

70. The Scheme of Survey work implemented as per G.O.Ms. 1177 CT and RE Dept Dated 30.10.1987 in the residential area of Rural Villages is called __________ Survey.
அரசாணை எண். 1177 வணிகவரி மற்றும் அறநிலையத்துறை நாள் 30.10.1987-ன் படி கிராமங்களின் குடியிருப்பு பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட நில அளவை __________ என்றழைக்கப்படுகிறது.

(A) Natham Survey
நத்தம் நில அளவை

(B) Town Survey
நகர நில அளவை

(C) Hill Villages Resurvey
மலைகிராம மறுநில அளவை

(D) Initial Survey
முதன்மை நில அளவை

71. The booklet used for angle observation during the traverse measurement work is called as
டிராவர்ஸ் சர்வேயின் பொது கோண வாசிப்பிற்காக பயன்படுத்தப்படும் புத்தகம் ________ என்றழைக்கப்படும்.

(A) Field Measurement Book
புலப்படச் சுவடி

(B) Adangal Book
அடங்கல் சுவடி

(C) B Field Book
ஆ-புலப்பணி புத்தகம்

(D) Traverse sheet
டிராவர்ஸ் ஷீட்

72. The Inspecting Officers are used ____________ map for identification of places during their inspections in the villages.
கிராமங்களில் தணிக்கை மேற்கொள்ளும் அலுவலர்கள் ஒரு இடத்தை அடையாளம் காண ________ வரைபடத்தினை பயன்படுத்துகின்றனர்.

(A) Tourist Map
சுற்றுலா வரைபடம்

(B) World Atlas
உலக வரைபடம்

(C) District Map
மாவட்ட வரைபடம்

(D) Village Map
கிராம வரைபடம்

73. The Surveyor in Survey Maintenance work should perform the duty atleast ____________day in a month for stone inspection/perambulation.
நில அளவை பராமரிப்பு பணியில் உள்ள நில அளவர் மாதத்திற்கு குறைந்தபட்சம் ________ நாட்கள் கல் தணிக்கை/கல்பார்வையிடும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

(A) 10 day
10 நாட்கள்

(B) 3 days
3 நாட்கள்

(C) 5 days
5 நாட்கள்

(D) one week
ஒரு வாரம்

74. The Surveyor in Survey Maintenance work should perform ____________ percent over check of the stones inspected by the village Administrative Officers.
நில அளவை பராமரிப்பு பணியில் உள்ள நில அளவர் கிராம நிர்வாக அலுவலரால் தணிக்கை செய்யப்பட்ட கற்களில் ________ சதவீதம் மேல் தணிக்கை செய்ய வேண்டும்.

(A) 15 percent
15 சதவீதம்

(B) 25 percent
25 சதவீதம்

(C) 30 percent
30 சதவீதம்

(D) 10 percent
10 சதவீதம்

75. The difference between the Calendar year and Fasli year is ______________ years.
காலண்டர் ஆண்டிற்கும், பசலி ஆண்டிற்கும் உள்ள வித்தியாசம் _________ ஆண்டுகள்.

(A) 510 years
510 ஆண்டுகள்

(B) 590 years
590 ஆண்டுகள்

(C) 490 years
490 ஆண்டுகள்

(D) 480 years
480 ஆண்டுகள்

76. The Surveyor in Survey Maintenance work should perform the duty in renewal of missing stones atleast ______________ Nos. in a month.
நில அளவை பராமரிப்பு பணியில் உள்ள நில அளவர் மாதத்திற்கு குறைந்தபட்சம் _________ எண்ணிக்கையிலான கற்கள் புதுப்பிக்கும் பணியினை செய்ய வேண்டும்.

(A) 10 Stones
10 கற்கள்

(B) 50 stones
50 கற்கள்

(C) 25 stones
25 கற்கள்

(D) 30 stones
30 கற்கள்

77. The Stone Register maintained by the Village Administrative Officer should be reprepared once in ______________ years.
கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் கல் பதிவேடு _________ ஆண்டுகளுக்கு ஒரு முறை புதியதாக தயார் செய்யப்பட வேண்டும்.

(A) 3 years
3 ஆண்டுகள்

(B) every year
ஒவ்வொரு ஆண்டும்

(C) 2 years
2 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

78. The Stock Register of Survey Instruments is called also as ______________ Register.
நில அளவைக் கருவிகளின் இருப்பு பதிவேடு _________ என்றும் அழைக்கப்படும்.

(A) Cash book
பணப்புத்தகம்

(B) Distribution Register
பகிர்மான பதிவேடு

(C) Service Register
பணிப் பதிவேடு

(D) Equipment Register
தளவாட புத்தகம்

79. The name of Drawing software used for digitalization of FMS is called _______________ in Survey Department.
நில அளவைத் துறையில் புலப்படங்கள் மின்னணுமயமாக்கல் செய்ய பயன்படுத்தப்படும் வரைவு மென்பொருள் __________ ஆகும்.

(A) Autocad
ஆட்டோகாட்

(B) Power Map
பவர் மேப்

(C) Liscad
லிஸ்காட்

(D) Collab land
கொலாப்லேண்டு

80. The Collab Land software is developed by the
கொலாப்லேண்டு மென்பொருள் __________ நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டதாகும்.

(A) Microsoft Company
மைக்ரோசாப்ட் நிறுவனம்

(B) Google Company
கூகுள் நிறுவனம்

(C) Apple Store
ஆப்பிள் ஸ்டோர்

(D) National Informatic Centre
தேசிய தகவல் மையம்

81. The G.T. Station coordinates are fixed by the Survey of India based on the _______________ coordinates.
ஜி.ட்டி. நிலைய ஆயப்புள்ளிகள் இந்திய நில அளவைத் துறையினரால் _____________ அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(A) Everest Ellipsoid
எவரெஸ்ட் எலிப்சாய்டு

(B) WGS 84
டபிள்யு.ஜி.எஸ். 84

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) American Database
அமெரிக்க புள்ளிவிவரப்படி

82. Which rules describes the duties of the Special Officer appointed to watch the interest of Government during the Town Survey?
நகர நில அளவை நடைபெறும் சமயத்தில் நியமனம் செய்யப்படும் தனி அலுவலரின் கடமைகளை விளக்கும் விதிகள் எவை?

(A) Survey Manual Vol. 1 Chapter XIII Rule 129(1) to 129(5)
நில அளவை விதி தொகுப்பு தொகுதி 1 அத்தியாயம் XIII விதி 129(1) முதல் 129(5) முடிய

(B) Survey Manual Vol. 1 Chapter XIII Rule 131
நில அளவை விதி தொகுப்பு தொகுதி 1 அத்தியாயம் XIII விதி 131

(C) Survey Manual Vol. 1 Chapter XIII Rule 140
நில அளவை விதி தொகுப்பு தொகுதி 1 அத்தியாயம் XIII விதி 140

(D) Survey Manual Vol. 1 Chapter XIII Rule 101
நில அளவை விதி தொகுப்பு தொகுதி 1 அத்தியாயம் XIII விதி 101

83. The Survey Rule Book ______________ is the defined the method of Survey to be used to Modern Survey using Modern Survey Instruments.
நில அளவை விதி புத்தகம் __________ என்பது நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு நவீன நில அளவை செய்யும் முறைகளை விவரிக்கின்றது.

(A) Tamilnadu Survey Manual Vol. I
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு - I

(B) Tamilnadu Survey Manual Vol. IV
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு - IV

(C) Chain Survey and Land Records Maintenance Manual Part. II
சங்கிலி நில அளவை மற்றும் நிலப் பதிவுருக்கள் பேணுகை விதி பாகம் II

(D) Tamilnadu Survey Manual Vol. III
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு - III

84. In any triangle, the three sides and the three angles are called
எந்தவொரு முக்கோணத்திலும், அதன் மூன்று பக்கங்களும், மூன்று கோணங்களும் __________ என்றழைக்கப்படும்.

(A) Elements of triangle
முக்கோணத்தின் கூறுகள்

(B) Solution of the triangle
முக்கோணத்தின் தீர்வுகள்

(C) Tables of Logarithms
மடக்கை அட்டவணை

(D) Offset lader of the triangle
முக்கோணத்தின் குத்தளவு அட்டவணை

85. During the Town Survey, the ____________ line measurement has been recorded for the refixing of Survey stones planted under the ground.
நகர அளவையில் பூமிக்கு அடியில் நடப்படும் நில அளவை கற்களை மறு நிர்ணயம் செய்ய ________ கோடு அளவுகள் பதிவு செய்யப்படுகிறது.

(A) G line
சங்கிலி கோடுகள்

(B) Tie line
டை லைன்

(C) Traverse line
டிராவர்ஸ் கோடுகள்

(D) Offset
குத்தளவுகள்

86. Proportional fraction between actual field measurement, size and scale of drawing is called as
புலத்தின் பூமியில் உள்ள அளவுகள் மற்றும் அமைப்பிற்கு ஈடாக வரைபடத்தில் வரையப்படும் அளவுக்கு உள்ள விகிதாச்சார பின்னம் ________ எனப்படும்.

(A) Representative fraction
பிரதிநிதித்துவ பின்னம்

(B) Hypotenuse
கர்ணம்

(C) Perpendicular
உயரம்

(D) Angle
கோணம்

87. Tamil Nadu Survey Manual Vol. IV was written and compiled by the
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு IV -ஐ எழுதி தொகுத்தவர்

(A) Dr. R. Kannan, I.A.S.
டாக்டர் ஆர். கண்ணன்., இ.ஆ.ப.,

(B) T.N. Subramanian
ட்டி.என். சுப்பிரமணியன்

(C) Dr. Ajay Bhattachariya, I.A.S.
டாக்டர். ஆஜய்பட்டாச்சாரியா., இ.ஆ.ப.,

(D) K.A. Mathew, I.A.S.
கே.ஏ.மாத்யு., இ.ஆ.ப.,

88. The period of Sun is in the South direction from the Centre line of the earth
சூரியன் பூமத்திய ரேகைக்கு தெற்கு திசையில் சஞ்சரிக்கும் காலம்

(A) From January 15 to June 15
ஜனவரி 15 முதல் ஜூன்15 வரை

(B) From September 21 to March 20
செப்டம்பர் 21 முதல் மார்ச் 20 வரை

(C) May 4 to October 3
மே 4 முதல் அக்டோபர் 3 வரை

(D) From March 21 to September 20
மார்ச் 21 முதல் செப்டம்பர் 20 வரை

89. The period of Sun is in the North direction from the center line of the earth is called as
சூரியன் பூமத்திய ரேகைக்கு வடக்கு திசையில் சஞ்சரிக்கும் காலம் __________ என்றழைக்கப்படுகிறது.

(A) Uthrayana
உத்ராயணம்

(B) Dakshnayana
தட்சினாயணம்

(C) Winter period
வசந்த காலம்

(D) Dhasra period
தசரா காலம்

90. The Angle from the true north direction is
உண்மையான வடக்கு கோட்டிலிருந்து உண்டாக்கும் கோணம்

(A) Magnetic Bearing
காந்த துருவ கோணம்

(B) True Bearing
உண்மையான துருவ கோணம்

(C) Bearing
துருவ கோணம்

(D) Co-ordinates
ஆயத்தூரங்கள்

91. How many years of uninterrupted enjoyment shall be considered for patta transfer without title document as per R.S.O. 31?
நில உரிமை பத்திரங்கள் இன்றி தடையற்ற அனுபவத்தின் அடிப்படையில் பட்டா மாற்றத்திற்கு அனுசரிக்கப்பட வேண்டிய அனுபவ காலம்

(A) 30 years
30 ஆண்டுகள்

(B) 50 years
50 ஆண்டுகள்

(C) 12 years
12 ஆண்டுகள்

(D) 15 years
15 ஆண்டுகள்

92. The line measured for taking offsets for Field Junctions from the Village and Khandam Traverse line is called
கிராமம் மற்றும் கண்டம் ஆகியவற்றின் கோண சுற்றிலிருந்து புல முச்சந்திப்புகளுக்கு எடுக்கப்படும் குத்தளவுகளுக்காக விடப்படும் கோடுகள் __________ எனப்படும்.

(A) Offset line
குத்தளவு கோடு

(B) G Line
ஜி லைன்

(C) Traverse line
டிராவர்ஸ் கோடு

(D) Purtal line
பர்ட்டால் கோடு

93. The duty of inspection of maintainable Survey Stone under the Rule 16 of Tamilnadu Survey and Boundaries Act VIII of 1923 have been fixed to the
1923 ஆம் வருட நில அளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டம் VIII பிரிவு 16-ன் படி ஒரு கிராமத்தில் உள்ள நில அளவை பராமரிப்பு கற்களை தணிக்கை செய்ய வேண்டிய கடமையை ________ என்பவருக்கு நிர்ணயித்த வழிவகை செய்கின்றது.

(A) Tahsildar
வட்டாட்சியர்

(B) Village Administrative Officer
கிராம நிர்வாக அலுவலர்

(C) Village Assistant
கிராம உதவியாளர்

(D) Village Panchayat President
கிராம ஊராட்சிமன்ற தலைவர்

94. During the downloading data from the Total Station used for field work ____________ is necessary.
புலப்பணியில் பயன்படுத்திய டோட்டல் ஸ்டேஷன் கருவியிலிருந்து தரவுகளை பதிவிறக்கம் செய்ய ________ என்பது தேவை.

(A) Software key or Dongle

(B) Prism

(C) Total Station Stand

(D) Centering of Total Station

95. In the initial Cadastral Survey, the long narrow fields such as roads, cart-tracks, channels, railways, etc. should split up into Survey Fields each measuring about ____________ in length.
கடாஸ்டிரல் முதன்மை நில அளவையின் போது அகலத்தில் குறுகிய மிகவும் நீளமான சாலைகள், வண்டிப் பாதைகள், வாய்க்கால்கள், இருப்பு பாதைகள் போன்ற புலங்களை அமைக்கும் பொழுது சுமார் ________ மீட்டர் நீளம் கொண்ட புலங்களாக உடைத்து அளவு செய்யப்பட வேண்டும்.

(A) 200 meters
200 மீட்டர்

(B) 500 meters
500 மீட்டர்

(C) 300 meters
300 மீட்டர்

(D) 100 meters
100 மீட்டர்

96. In which Rule define that the Senior Draughtsman should test 25 percent of the plotting in each sheet of the Village map?
ஒரு முதல்நிலை வரைவாளர் கிராம படம் வரைதலில் 25 சதவீத பணியினை பரிசோதிக்க வேண்டும் என நிர்ணயம் செய்யும் விதி யாது?

(A) Tamilnadu Survey Manual Vol. I chapter VIII Rule No. 16
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு தொகுதி. I அத்தியாயம் VIII விதி எண். 16

(B) Tamilnadu Survey Manual Vol. I chapter VIII Rule No. 17
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு தொகுதி. I அத்தியாயம் VIII விதி எண். 17

(C) Tamilnadu Survey Manual Vol. I chapter VIII Rule No. 22
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு தொகுதி. I அத்தியாயம் VIII விதி எண். 22

(D) Tamilnadu Survey Manual Vol. I chapter VIII Rule No. 21
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு தொகுதி. I அத்தியாயம் VIII விதி எண். 21

97. ______________ is used for the measure the Celestial Sphere.
கோளங்களை அளப்பதற்குரிய ஒரு கருவியாக வட்டங்களை பயன்படுத்துவது போல் கோள வடிவமான (Celestial Sphere) _________ அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

(A) Diagonal scale
டயகனல் ஸ்கேல்

(B) Tricno meter
டிரக்னா மீட்டர்

(C) Pisco meter
பிஸியோ மீட்டர்

(D) Scale
ஸ்கேல்

98. The composite map consists ______________ fields.
காம்போசிட் composite map என்பது _________ உள்ளடக்கியது.

(A) Street Survey Fields
தெரு புல எண்கள்

(B) Town Survey Field
நகர புல எண்கள்

(C) Cadastral Survey Fields
கடாஸ்டிரல் நில அளவை புல எண்கள்

(D) Natham Survey Fields
நத்தம் அளவை புலங்கள்

99. In Town Survey the map contain Ward, block and cadastral field boundaries is called as ______________ map
நகர அளவையில் வார்டு எல்லைகள், பிளாக் எல்லைகள் மற்றும் கடாஸ்டிரல் புல எல்லைகளை கொண்ட வரைபடம் _________ எனப்படும்.

(A) Demarcation block map
எல்லைகுறியீட்டு பிளாக் வரைபடம்

(B) Rough block map
தோராய பிளாக் வரைபடம்

(C) Index map
அட்டவணை படம்

(D) Ward Map
வார்டு வரைபடம்

100. The submission of annual periodical of Azimuth observation is the duty of the ______________ officers.
சூரிய கோண வாசிப்பு குறித்த ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்புள்ள அலுவலர்கள் __________ ஆகும்.

(A) Inspector and Deputy Inspector of Surveys
நில அளவை ஆய்வாளர் மற்றும் துணை ஆய்வாளர்

(B) Sub Inspector of Survey
நில அளவை சார் ஆய்வாளர்

(C) Assistant Director
உதவி இயக்குநர்

(D) Field Surveyor
நில அளவர்